திருச்சிற்றம்பலம்.

பாடியென வழங்கும்

# திருவலிதாய க்ஷேத்திரமான்மியம்.

இஃது

திருமயிலை - சண்முகம்பிள்ளையால்

பார்வையிடப்பட்டு

தையூர்-குழந்தைவேலு முதலியாரால்

சென்னை :

தாம்ஸன் அண்ட் கம்பெனியிற்

பதிப்பிக்கப்பட்டது.

1898.

திருச்சிற்றம்பலம்.

# பாடி எனவழங்கும் திருவலிதாயமான்மியம்

இத்தொண்டைநாட்டில் "ஏகம்பமேற்றளிவிண், கண்ணோங்குமதிலோணகாந்தன் றளியநேக தங்காவதங் கச்சிநெறிக்காரைக்காடே, உண்ணாடு குரங்கணின் முட்டந் திருமாகறலோத்தூர் வன்பார்த்தான் பனங்காட்டூர் வல்லமாற்பேறே. ஊறலிலம்பையங் கோட்டூர் விற்கோல மாலங்காடுயர் பாசூர் வெண்பாக்கங்கள்ளில் காளத்தி, மாறில் திருவொற்றியூர் வலிதாயம்பாலி வடமுல்லை வாயில்வேற்காடு திருமயிலை, ஈறில்திருவான்மியூர் கச்சூராலக் கோயிலிடைச்சுரங் கழுக்குன்றமச் சிறுபாக்கமே, மாறில் திருவக்கரையே யரைசிலி தொல்லிரும்பைமாகாளந் தொண்டைநன்னாட்டெண்ணின் முப்பானிரண்டே" எனப் பெரியோராலெடுத்துச் சொல்லப்பட்ட வண்ணம் திருக்கச்சியே கம்பம், திருக்கச்சிமேற்றளி, திருவோணகாந்தன்றளி, கச்சியநேகதங்காவதம், கச்சிநெறிக்காரைக்காடு, குரங்கணின்முட்டம், திருமாகறல், திருவோத்தூர், திருவன்பார்த்தன்பனங்காட்டூர், திருவல்லம், திருமாற்பேறு, திருவூறல் (தக்கோலம்), இலம்பையங் கோட்டூர், திருவிற்கோலம், (கூவம்), திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்கள்ளில், திருக்காளத்தி, சீகாளத்தி, திருவொற்றியூர், திருவலிதாயம் (பாடி), வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு, திருமயிலை, திருவான்மியூர், திருக்கச்சூராலக்கோயில், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவக்கரை, அரைசிலி இரும்பைமாகாளம் ஆகிய சைவசமயாசாரியர் அருளிச்செய்த தேவாரம்பெற்ற முப்பத்திரண்டு ஸ்தலங்களுள் ஒன்றாகியும், பிரமவிஷ்ணுக்கள் பிருகஸ்பதி முதலிய தேவர்களாலும் பாரத்துவாசர் முதலிய முனிவர்களாலும் அரு

மான் முதலிய அன்பர்களாலும் வழிபடப்பெற்றதாகியும் எண்ணியவரங்களை எண்ணியவாறே தந்தளிப்பதுமாகிய பாரத்துவாசதீர்த்தம், அநுமதீர்த்தமுதலிய தீர்த்தவிசேடங்களையுடையதாகியும் திருஞானசம்பந்தஸ்வாமிகள் தேவாரம் பெற்றதாகியும, தெய்வீகமுற்றுப் பாடியெனவழங்கும் திருவலிதாயமானது நாளுக்குநாள் ஜீர்ணதிசையை யடைந்து சிலகாலம் நித்தியபூசனையு மில்லாமல் திருக்கதவுசாத்தப்பட்டிருந்து சுலபசாந்தி கும்பாபிஷேகஞ்செய்வித்து நித்தியபூசை பஞ்சபர்வமாத்திரம் நடத்தப்பட்டு வருகின்றது. இத்தலம் சென்னைக்கு ஐந்துமயில் கொன்னூர் ஸ்டேஷனுக்கு ஒருமயில் சமீபத்திலிருப்பது. சைவசமயாபிமானிகள் யாவரும் இத்தலத்தைத் தரிசித்து ஷை ஆலயத்தில் ஜீர்ணமாயுள்ள மதிற்சுவர், கோபுரவாயில், துஜஸ்தம்பம், ஸ்தூபிகள், யாகசாலை, மடப்பளி, கல்யாணமண்டபம் முதலிய திருப்பணிகளை இயன்ற அளவு நிறைவேற்றி சிவபுண்ணியத்தைக் கைக்கொள்ளச் சிவபெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்துளோர்பெறும் புண்ணிய நான்மடங் குறுவார்.

இங்ஙனம்,

ப. தணிகாசலமுதலியார்.

நெ. 7-8, வெங்கையர் வீதி,

பெத்தநாயகன் பேட்டை,

சென்னை.

உ

சிவமயம்

## தொண்டைநாட்டிலே

பாடியெனவழங்கும்

# திருவலிதாயக்ஷேத்திரமான்மியம்.

---

அறுதிமலமுத்தராகிய சிவபிரான் திருமுகத்திற்றோன்றிய ஐந்து இருடிகளுள் பாரத்துவாச இருடியென்பவர் அன்பர்க்கு அநுக்கிரகஞ்செய்துகொண்டு இத்தொண்டைநாட்டிலே சஞ்சரிக்கையில் பல மரங்கள் நெருக்கத்தாலும் பகையின்றி வாழும் பல விலங்கு பறவையாலும் நீர்வளநிலவளம் நிகரின்றிச் செழிப்புற்றுவிளங்கும் ஒரு தெய்வீகம்பெற்ற தபோவனங்கண்டு மிகுதியுமதிசயமுடையவராய் உவகைமேற்கொண்டு, அதை விட்டகலமனமின்றி அங்கே தம்பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அதில் ஸ்தானமுதலிய நியதிமுடித்து, ஆசனத்தமர்ந்து, சிவபெருமானை இதயத்திருத்தி எண்ணிறந்தகாலம் செயற்கரிய பெருந்தவஞ்செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில், ஒரு நாள் சிவபெருமான் திருவுள்ளமகிழ்ந்து, திருமால்முதலிய தேவகணங்களும் வசிட்டமுனிவர் முதலிய முனிகணங்களும், நந்திதேவர்முதலிய பிரமதகணங்களும் புடைசூழ்ந்து துதிக்க, அரம்பையர்நடிக்க, அன்பர்கள் ஹரஹரஹரவென்றுகோஷிக்க, இடபவாகனத்தி லெழுந்தருளி உமாதேவியாரோடு திருக்காட்சி தந்தருளினர். அதுபோது அவர் நிஷ்டை தெளிந்தெழுந்திருந்து, அடியற்ற மரம்போல் வீழ்ந்து, பல்முறை எட்டுறுப்பு

நிலமுறப்பணிந்து, வலம்வந்து குடந்தம்பட்டுக் கூத்தாடி, இருகைகளும் சிரமேற்குவிய, ஆனந்தக்கண்ணீர் பெருக, உடல்புளகெழ, உள்ளங்குழைய, "மகா தேவசம்போ சங்கர சதாசிவ" என்று நாத்தழும்பேறப் பலவாறு துதித்து நின்றனர்; அதுகண்டு சிவபெருமான் கருணை கூர்ந்து, "தவத்தால் வாடிய தநயனே! நின் அன்பின் நிலைக்கு மிகமகிழ்ந்தனம்; வேண்டிய வரம் பெறு" என்று கட்டளையிட்டனர்.

அது கேட்ட பாரத்துவாசர் "எளியேனிடத்தும் எம்பெருமான் வைத்த கருணையை என்னென்று வியப்பேன்" என்றுபுகழ்ந்து, அன்புமேலிட்டு ஆனந்தக்கூத்தாடி, "எந்தையே! அடியேனையாட்கொண்டது மெய்மையாயின் இவ்வாறே ஜகன்மாதாவாகிய உமாதேவிசகிதராய்ப் பரிவாரங்களோடு அடியேனுடைய பூசனையேற்று இத்தலத்தில் எக்காலத்தும் சாநித்தியராய் எழுந்தருளி இருத்தல்வேண்டும். அன்றியும் என்னுடையபூசனை உரிமையாகக் கொண்டு வீற்றிருந்தருளலால் தேவரீருக்குப் *பலிதாயநாதரெனவும், இத்தலத்திற்குப் பலிதாய க்ஷேத்திரமெனவும், இத்தீர்த்தத்திற்குப் பாரத்துவாச தீர்த்தமெனவும் பெயர்வழங்கவேண்டும். இதுநிற்க, இத்தீர்த்தத்தில் மூழ்கி தேவரீரைவழிபடுவோர் எத்தன்மையராயினும் அவர் பெரும்பவத் தொடக்ககன்று முத்தியின்பம் எளிதிலடையவேண்டும். இவையே அடியேனவேண்டுகோள்'

*பலிதாயநாதர்-பூசையை உரிமையாகக் கொண்டவர்; பலி-பூசை; தாயம்-உரிமை. பலிதாயமெனபது தமிழில் வலிதாய மென்றாயிற்று. திருபலீசுரர் என்பது திருவல்லீசுரரென இக்காலத்து மருவி வழங்குகின்றது. இத்தலபுராணம் முற்றுங் கிடைக்கவில்லை; கிடைக்கப் பெற்றுள்ளவர்கள் தயைசெய்தனுப்பில் வந்தனத்தோடேற்று அச்சிட்டு வெளிப்படுத்துவேன.

என்று விண்ணப்பித்தனர்; அக்கடவுள் அவர் வேண்டுகோட்கிரங்கி, அங்ஙனமே அவர்பூசனையை யேற்று, சகன்மாதா சமேதராய்ச் சுயம்புமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு, பரிவாரங்களோடு வீற்றிருந்தருளினர்.

பின்பு அத்தலத்திலே, பிரமவிஷ்ணுக்களும் பிருகஸ்பதிமுதலியவர்களும் அநுமான முதலியவர்களும் வழிபட்டு, வேண்டிய இஷ்டசித்திகளையடைந்தனர். பிற்றைக்காலத்தில், இந்நாட்டையாண்ட ஒருசேரிழராஜன் இத்தலமகிமையை உணர்ந்து, வலிதாயநாதருக்கும் ஜகன்மாதாவுக்கும் மற்றைப்பரிவாரங்கட்கும் கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கோபுரம், திருமதில், ஐந்துபிராகாரம் முதலியவைசெய்வித்து, பாரத்துவாசதீர்த்தம் அநுமதீர்த்தமுதலிய தீர்த்தங்களையும் புதுக்கி, கும்பாபிஷேகம்புரிவித்து, நித்தியநைமித்திகங்களையும் விழாக்களையும் நடாத்தினர். இத்தலம் திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய தேவாரமும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழும் பெற்றதாய், இத்தொண்டைநாட்டிலே, தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவிளங்குகின்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

## திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவலிதாயத் தேவாரம்.

பண்-நட்டபாடை. (முதல்திருமுறை.)

---

### திருச்சிற்றம்பலம்.

பத்தரோடுபலரும்பொலியம்மலரங்கைப்புனறூவி
ஒத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயஞ்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (௧)

படையிலங்குகரமெட்டுடையான்படிறாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வனுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாய
மடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (௨)

ஐயனொய்யனணியன்பிணியில்லவரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான் றிருமாதோடுறைகோயில்
வையம்வந்துபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாயம்
உய்யும்வண்ணநினைமின்னினைந்தால்வினைதீருநலமாமே. (௩)

ஒற்றையேறதுடையானடமாடியோர்பூதப்படைசூழப்
புற்றினாகமரையார்த்துழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுலகத்தொளிமல்கிடவுள்கும்வலிதாயம்
பற்றிவாழுமதுவேசரணாவதுபாடும்மடியார்க்கே. (௪)

புந்தியொன்றிநினைவார்வினையாயினதீரப்பொருளாய
வந்தியன்னதொருபேரொளியானமர்கோயிலயலெங்கும்

மந்திவந்துகடுவனொடுங்கூடிவணங்கும்வலிதாயம்
சிந்தியாதவவர்தம்மடும்வெந்துயர்தீர்தலெளிதன்றே. (௫)

ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்துழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறைவைத்தவெம்மாதிமகிழும்வலிதாயந்
தேனியன்றநறுமாமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே. (௬)

கண்ணிறைந்தவிழியின்னழலால்வருகாமனுயிர்வீட்டிப் [யில்
பெண்ணிறைந்தவொருபான்மகிழ்வெய்தியபெம்மானுறைகோ
மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள்வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே (௭)

கடலினஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தநடமாடி
யடலிலங்கையரையன்வலிசென்றருளம்மானமர்கோயில்
மடலிலங்குகமுகின்பலவின்மதுவிம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (௮)

பெரியமேருவரையேசிலையாமலைவுற்றாரெயின்மூன்று
மெரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணாவடிவாகு
மெரியதாகியுறவோங்கியவன்வலிதாயந்தொழுதேத்த
உரியராகவுடையார்பெரியாரெனவுள்கும்முலகோரே. (௯)

ஆசியாரமொழியாரமண்சாக்கியரல்லாதவர்கூடி
ஏசியீரமிலராய்மொழிசெய்தவர்சொல்லைப்பொருளென்னேன்
வாசிதீரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியோரே. (௰)

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருண்மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே. (௧௧)

**திருச்சிற்றம்பலம்.**

உ

வேலுமயிலுந்துணை.

பாடியென வழங்கும் ஸ்ரீ திருவலிதாயத்தில்
ஸ்ரீ திருவலிதாயநாதர் இடப்பாகத்தி லெழுந்தருளிய

# ஜெகன்மாதாவின்மேல்

## தோத்திரம் கீர்த்தநம்.

புரசை அஷ்டாவதானம்
சபாபதிமுதலியார் அவர்கள் மாணாக்கர்
**திருமயிலை - சண்முகம்பிள்ளை அவர்களால்**
இயற்றப்பட்டு
தொண்டைமண்டலம் துளுவவேளாளர்களுடைய
இயற்றமிழ்ப் போதகசாலை இங்கிலீஷ்உபாத்தியாயர்
**ப. பாபுமுதலியாரவர்களால்**

சென்னை:
சென்ட்ரல் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.
ஜய ௵ ஆனி ௴

உ

# வேலுமயிலுந்துணை.

காப்பு.

உம்பன் முகத்திறை
அம்பொன் மலர்த்தாள்
நம்புதி நெஞ்சே
வன்பத றற்கே.

நீர்தந்தவேணிப்பிரானவந்தருபேதநிலவுலகினிற் காட்டுவான், நிலவும் பிரானமுலவணைப்பிரான்றில்லை வயினீண்மன்றிலாட்டுகந்த, கூர்தந்த முத்தலையயிற்கு லிசமேந்து நங்குலிசப்பிரானிடத்தே, குலவுகின்றணை டைகள் புலம்புசெஞ்சரணமே கும்பிடுமவாமருள்செ யாய், பார்தந்த சிறறுதாவன்னமே வேதப்பழம பாட லுரைகிள்ளையே, பச்சைமால் பிணவருங் குயிலேயரு ந்தவர் பராவுசீர்க்கரிய மயிலே, வார்தந்த பூணமுலைக் கவுரி பாண்டியராஜ வரபுத்திரிகா ரத்தினமே, வலிதாய தீயவினையிலையாகவேய்புதவு வலிதாயமேவு மனையே. (க)

வேணுபுரவேந்தனுக்கன்றமல ஞானம் விழைந் தளித்திடவவனுமிவ், வேலைசூழ் ஞாலமுய்வான்றிருநெ றித் தமிழ்விருப்பினொடு நல்கினனெனின், நாணிடாது ழல் சிறியதெய்வநெறியாவு மிங்காட்டி னிற்றலையெடுத்

தல், ஞாயிற்றினொளியின் மின்மினியினொளியி லகலெ னநாட்டுதற் கையமுளதோ, வேணிமிசை வேணிவை த்தோங்குமெம் மானிடமிளிர் தருந் தூவியனமே, விரிதரு கலையெலா நன்கெடுத்தோது மருள்விரவு கற்பகவல்லியே, வாணிமணவாளனிகரும் பாத்துவன்மும் மைமல மோசனஞ்செயமுதே, வலிதாய தீயவினை யிலையாகவேபுதவு வலிதாயமேவு மனையே. (௨)

சனகன்மகளார் பொருட்டொரு தூதெனச்சென்று தண்கடலிலங்கைபோகது, தசமுகன்றன் னொடுமையாடியவன் வாழ்நகர் தழற்கிரையெனத் தந்தவன், கனிவினெட்டுருட்சைவநெறி யுய்யுநெறியாக் கடைப்பிடித்தர்ச்சனை செய்தே, கதியெய்த நின்றுனெனிற் கரிசிறுமூலமிக் கடையனேற்கருள்வதென்றோ, தனைநிகர் தமிழ்ப்பாண்டி மன்னவன் முன்செயுந் தவமனைதொருருவங்கொடித், தாணிமிசை வருதடாதகையெனப்போந்துநற்றாணிபருடன் கொடும்போர், மனவெழுச்சியினிற்புரிந்த வனைவென்றிறையை மாலைவேய்ந்தோங்குகிதியே, வலிதாய தீயவினை யிலையாகவேபுதவு வலிதாயமேவு மனையே. (௩)

செச்சைமாமலர் புரையுமேனிப் பிரானெங்கள் சிவபிரான் றேவர்கள்பிரான், திண்போர்விடைப் பிரானெம்பிரானின்னேடுசேரினைத் தொழில்வல்லனென், றிச்சகத்தரியமாமறை துணிந்தோதலானேனமுயே னி

ன்னைவழிபட், டிருப்பதுமறிந்திங் கிரங்ககில்லாயெனி
னெனையாவர் காப்பாரம்மே, விச்சையுருவத்தரும பரை
யேசி வானந்தவெள்ளமேவிமலவாழ்வே, மேதக்ககே
ள்விப்பெருக்கே யெழிற்பரம வீட்டினுக்கோர் நிதிய
மே, வைச்சந்தி பெண்டிர்முதலனை துறந்தோருள்ள
மன்னுசிற் சுகவாரியே, வலிதாய தீயவினையிலை யாக
வே யுதவுவலிதாயமேவு மனையே (௪)

கல்லாதுமடவார்கள் காற்கேவல்செய்தே கழிந்தே
னெனக் கருதினின், கஞ்சமலர்புரையுமச் சீறடிக்கன்பே
கசிந்துருக நல்காயெனிற், பொல்லாத நிரயத்தொ
கைக்கேபுகுந்து நனிபொன்று வேனீதுசரதம், பொய
யன்றெமைப் புரப்பார்நின்னையல்ல திப்புவியிலெவ
ரோசொலமமே, வில்லார்நுதற்கருணை வாழ்வே விசா
கனைவிழைந்து நல்கியமுத்தமே, விரிமறைத துணி
புணர்ந்தோர் புகலெனச் செறியுமேதக்க ஞானவாழ்
வே, மல்லார்ந்த வடனீடுகச்சி நகர்வயினேறுமரகதப்
பெரியவெற்பே, வலிதாய தீயவினையிலையாகவேயுதவு
வலிதாயமேவு மனையே. (௫)

எவ்வுருக்கொள்வனிறை யவ்வுருக்கொள்வையென
விங்கருமறைக் கூட்டமே, எடுத்தியம்புமபரி சுணர்ந்
தே நின்னருளெய்த வெண்ணி மெய்யன்பர்பணியே,
அவ்வியமவித்த சிந்தையினடி யாற்றேனிவ்வல்லற்
பிறப்பெனும்பே, ராழியிற்சிறுதுரும்பே போலுமறி

விழுந்தலமர் திருப்பதழுகோ, செவ்விகுன்றுமனத்த பி
ராமிபட்டர் சொற்செறிகவிதை கேட்டுவந்த, செல்வ
மேநற்கருணைவாழ்வே யெனுதுகுலதெய்வமே யிமய
மயிலே மவ்வன்மலர் நீடுபொழின்மூல்லைவாயிற்பதிவ
யங்கவருமந்தாரமே, வலிதாய தீயவினை யிலையாகவே
யுதவு வலிதாயமேவு மனையே. (௬)

நான்படும்பாடுரைத்திடவல்லதோ முக்கணம் பனி
டமருவு முமையே, நவிலினஃதேட்டினி னடங்கிடுந
கையதோ ஞாலமெல்லா முயிர்த்த, தேன்படுபசுங்து
ழற் காடுடையசெல்வமே சிறியனேன் பாலிரங்கிச்,
செல்வர்மனையிற் சென்றிரந்திடா துன்னன்பர் சேர்க்
கையே மருவவருளாய், வான்படும் பொழினீடுமயிலை
யாலங்காடு வண்கழுகுன்றொற்றியூர், மறைபரசுமோ
த்தூரெழின் மாகறல்வல்ல மன்னிவளர் கருணைவா
ழ்வே, மான்படுங்கண்ணி மயவல்லியேயென்னுள் வய
ங்கு மானந்தவளையே, வலிதாயதீயவினை யிலையாகவே
யுதவுவலிதாயமேவு மனையே, (எ)

நாரணியனந்தசுககல்யாணி யானந்தஞானபரிபூரணி
யெனு, நாடுமெய்யன்பரைச்சேராது மாதரார்நலமதே
பொருளதென்றித், தாரணியினம் மேயுழன்றேனெனக்
குமித் தருணமுன் கமலபாதம், தனையன்பினேத்தி வழி
படு மாறுநின் கருணை தனையே வழங்கு கண்டாய், கார
ணிமிடற் றிறைவனிடமேவு மன்னமே கந்தனைத் தரு

சொன்னமே, கலைபாவு சிற்சுகக்கடலேவரைக் கிறைக
னிந்துதவுமமுதவடிவே, வாரணிதனத்தறம்வளர்த்த
மின்னே யானைமாமுகனைநல்கு பிடியே, வலிதாய தீய
வினை யிலையாகவேயுதவு வலிதாயமேவு மனையே. (அ)

பாசமதசத்துசதசத்துயிர்கள் சத்தொருபரம்பரனெனு
நான்மறைப்,பாப்பனைத்துங் கூறிடச்சிறிது முணர்வி
ன்றுபஃறெய்வ நெறியணைந்தும், காசுலாமணி முலைம
டந்தையர்கள் போகமே கதியென்று மறிவுருவமாக்,
கண்டுதனையே பரம்பொருளென்று மெண்ணியிக்கடை
யனே னலைவதழகோ, பேசுபுகழ்கச்சிப் பதிக்கண்வந்
தறனெலாம் பீடுபெறவே வளர்த்துப், பெருந்தகைமை
யர்ச்சனைசெயக் கமைபையேவிடப் பெய்வளைச் சுவடுமெ
ன்றும, வாசமுலையின் சுவடுமேவிடப் புரிதரும் வயங்கு
சிற்சுக நிலையமே, வலிதாய தீயவினை யிலையாகவேயுதவு
வலிதாயமேவு மனையே (கூ)

கல்லேன்கடுங்கொலை புரிந்தொழுகு வேன்வெறுங்
கலதியிவனென்று நீதான், கைவிடுதியே லுன்னருட்
கிழுக்காயென்று கழறுவேன்வேறறிகிலேன், பொல்
லாதமாயைப் புணர்ப்பினிலழுந்தி யென்புந்தியைச் சூ
றையிட்டுப், பொய்யுலக வாழ்க்கையே னாயினேனெற்
கினிப்புகலிடம்பிறிதுமுண்டோ, சொல்லார் மலர்க்கஞ்
சன்மாயனான் மஞ்ஞையோன்றும்பி முகன்மதனெ

ன்றித், துணையோர்க்கெழிற் சிருக்கொருமணிவடந்தி கிரி சூரிசங்கு சூலமயில்வேல், வல்லேய் தரும்பாசம ங்கு சங்கமைழவில் பூவாளிமுதலன வகுத்தோய், வலி தாய நீயவினை யிலையாகவேயுதவு வலிதாயமேவு மனே யே, (கo)

உ

தேவிசகாயம்.

# சகன்மாதா கீர்த்தநம்.

---

இ-ம் அடாணு.

பல்லவி.

தாயே - வரந்தருவாயே - அகிலமீன்ற

அநுபல்லவி.

தேயம்புகழும்வலிதாயமேவிவளர்
சிற்பரியற்புதிவ்யக்ருபாகரி தாயே.

சரணங்கள்.

பாசாங்குசதரவிக்நவிநாயக
பக்தரக்ஷகஜனனீ - பசு

பாசவிமோசனி காத்யாயனி சுக
பாணி மஹிஷமர்த்தனீ
மாசாம்பவி கல்யாணி புராதனி
மலயத்வஜவரபுத்ரி மதிவதனி - தாயே.
பாலலோசனி பராபரி சங்கரி
பங்கேருஹநேத்ரி - மிருக்ரு
பாலிகரகபாலீ யனுகூலீ
பற்பலசிவக்ஷேத்ரி
ஞாலமேதகுகனைத் தருவீரி
ஞானநாடகம்புரிகௌமாரி - தாயே.
நீலிசூலிநிகமாநதவொய்யாரி
நிர்மலிகிரிகன்னி - அதி
நிட்களரூபிசிவாகமமூலி
நிரந்தரிசம்பன்னி
சோமமாமுகுந்தன் தேடருமங்கரி
குழந்தைசண்முகன் தமிழ்க்கருள் சுந்தரி-தாயே

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.